# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 1998 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, இஸ்லாமிய வழிகாட்டலுக்கான நிலையம் (கூட்டிணைத்தல்) சட்டம்

---

*(1998, யூன் மாதம் 04 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

---


1998, யூன் மாதம் 05 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : ரூபா 6.50 தபாற் செலவு : ரூபா 2.50

## 1998 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க இஸ்லாமிய வழி காட்டலுக்கான நிலையம் (கூட்டிணைத்தல்) சட்டம்

[1998 ஆம் ஆண்டு யூன் மாதம் 04 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச. வ.—ஓ. 11/ 94

### இஸ்லாமிய வழிகாட்டலுக்கான நிலையத்தைக் கூட்டிணைப் பதற்கானதொரு சட்டம்

முன்னுரை.

"இஸ்லாமிய வழிகாட்டலுக்கான நிலையம்". என அழைக்கப் படுவதும், அறியப்படுவதுமான நிறுவனமொன்று அதன் குறிக்கோள்களை பயனுற நிறைவேற்றும் நோக்கத்துக்காகவும் அதன் உறுப்பினர்களால் இணங்கிக்கொள்ளப்பட்ட விதிகளுக், கிணங்கச் சொல்லப்பட்ட நிறுவனத்தோடு தொடர்புபட்ட எல்லாக் கருமங்களையும் பயனுற நிறைவேற்றிக் கொண்டுநடாத்தும் நோக்கத்துக்காகவும் காத்தான்குடியில் அமைக்கப்பட்டிருந்ததாலும் ;

சொல்லப்பட்ட நிறுவனமானது எந்தப் பல்வேறு குறிக் கோள்களுக்காகவும், கருமங்களுக்காகவும் அமைக்கப்பட்டதோ அந்தப் பல்வேறு குறிக்கோள்களையும், கருமங்களையும், இதுவரை சொல்லப்பட்ட நிறுவனம் வெற்றிகரமாக நிறை வேற்றியும் கொண்டுநடாத்தியும் வந்துள்ளதாதலாலும் ; அது கூட்டிணைக்கப்பட விண்ணப்பித்துள்ளதாதலாலும் ; அத்தகைய விண்ணப்பத்தை அனுமதித்தல் விரும்பத்தக்கதாயும் உசிதமானதாயும் உள்ளதாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளு மன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:—

சுருக்கப் பெயர்.

1. இச்சட்டம், 1998 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, இஸ்லாமிய வழிகாட்டலுக்கான நிலையம் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

இஸ்லாமிய வழிகாட்டலுக்கான நிலையத்தைக் கூட்டிணைத்தல்.

2. இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும் அதன்பின்னரும், (இதனகத்துப்பின்னர் "நிலையம்" எனக் குறிப்பீடு செய்யப் படும்) இஸ்லாமிய வழிகாட்டலுக்கான நிலையத்தின் தற்போதைய உறுப்பினர்களாக உள்ளவர்கள் அத்துடன் அத்தகைய எண் ணிக்கை கொண்ட ஆட்களும் இத்தால் உருவாக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களாக இதன்பின்னர் சேர்த்துக் கொள்ளப்படும் அத்தகைய வேறு ஆட்களும் (இதனகத்துப் பின்னர் "கூட்டுத்தாபனம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) "இஸ்லாமிய வழிகாட்டலுக்கான நிலையம்" என்னும் பெயர் மகுடத்தின்கீழ் இடையறா வழியுரிமைகொண்ட கூட்டிணைக் கப்பட்ட குழுவொன்றாகவிருத்தல் வேண்டுமென்பதோடு, அது அப்பெயர்கொண்டு எல்லா நீதிமன்றங்களிலும் வழக்குத் தொடுக்கலாம் என்பதுடன், அதற்கெதிராக வழக்குத் தொடுக்க வும்படலாம். அத்துடன் பொதுஇலச்சினை ஒன்றை வைத்திருக்க வும், பயன்படுத்தவும், அதன் விருப்பப்படி அதனை மாற்றவும் முழுத்தத்துவமும் அதிகாரமும் கொண்டிருத்தலும் வேண்டும்.

2 — டீ 036767 — 1,100 (95/09)

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

3. கூட்டுத்தாபனம் அமைக்கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாக இருத்தல் வேண்டும் என இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது:–

(அ) இஸ்லாமிய நற்போதனைகளுக்கிணங்க முஸ்லிம்கள் அவர்களது ஆன்மீக வாழ்வையும், லௌகீக வாழ்வையும் கொண்டுநடாத்துவதற்காக அவர்களைத் தூண்டுதலும், வழிநடத்திச் செல்லுதலும் ;

(ஆ) திருக் குர்ஆனின் போதனைகளையும் திரு நபி (ஸல்) அவர்களது வழிமுறைகளையும் மக்களிடையே பரவச் செய்தல் ;

(இ) பிரசங்கங்கள், மாநாடுகள், கலந்துரையாடல்களை நடாத்துவதன் மூலம் ஏனைய மதத்தவர்களுடனான நட்புறவையும் சமூக புரிந்துணர்வையும் மேம்படச் செய்தல் ;

(ஈ) முஸ்லிம் மாணவர்களது மேற்படிப்பு உயர்வுக்காக உதவிகளை வழங்குதல் ;

(உ) அரபுமொழியைக் கற்பதற்காக இளைஞர்களை ஊக்கப்படுத்துதல்;

(ஊ) முஸ்லிம்களிடையே வாசிக்கும் பழக்கத்தை உண்டு பண்ணக்கூடியதாக கிராமிய மட்டத்தில் வாசிகசாலைகளை நிறுவுதல் ;

(எ) இலங்கையிலும் ஏனைய நாடுகளிலுமுள்ள முஸ்லிம்கள் பற்றிய தரவுகளைத் திரட்டுவதற்கும், அவற்றைப் பாதுகாப்பதற்கும் பணியகமொன்றை உருவாக்குதல் ;

(ஏ) மார்க்க விடயங்களிலும் சமய வழிபாடுகளிலும் முஸ்லிம் பெண்களின் ஈடுபாட்டை ஊக்குவித்தல்;

(ஐ) மேற்கூறப்பட்ட குறிக்கோள்களை அல்லது அவற்றில் எவற்றையும் எய்துவதற்கு இச்சட்டத்துடன் அல்லது எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்துடன் ஒவ்வாததாக இல்லாத அல்லது இச்சட்டத்திற்கு அல்லது எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்திற்கு இடைநேர்விளைவான அல்லது உசிதமான அத்தகைய எல்லாச் செயல்களையும் கருமங்களையும் செய்தல்.

கூட்டுத்தாபனத்தின் பொதுத் தத்துவங்கள்.

4. (1) கூட்டுத்தாபனமானது இச்சட்டத்தினதும் எழுத்திலான வேறேதேனும் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைய அதன் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கு அவசியமான அல்லது உகந்தவையான அல்லது இடைநேர்விளைவானவையான எல்லாக் காரியங்களையும் செய்வதற்குத் தத்துவமுடையதாதல் வேண்டும்.

(2) முதலாம் உட்பிரிவின் மூலம் அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பொதுமைக்குப் பங்கமின்றிக் கூட்டுத்தாபனம் பின்வரும் தத்துவங்களை உடையதாய் இருத்தல் வேண்டும் :—

(அ) உள்நாட்டு அல்லது வெளிநாட்டு மூலகங்களிலிருந்து பணவகையாகவோ, வேறுவகையாகவோ நன்கொடைகளையும், வழங்கல்களையும், கொடைகளையும், மானியங்களையும், ஒப்பப்பணங்களையும் பெற்றுக்கொள்ளுதல் அல்லது சேகரித்தல் ;

(ஆ) வங்கிக் கணக்குகளை ஆரம்பித்தலும், முடித்தலும் நடாத்தலும் அத்துடன் பிணைப்பொறுப்புடன் அல்லது பிணைப்பொறுப்பில்லாது பணம் கடன் வாங்குதல் அல்லது பணம் பெறுதல் ;

(இ) கூட்டுத்தாபனத்துக்கு உரித்தாக்கப்பட்டுள்ள அல்லது அதற்குச் சொந்தமான நிதிகளைப் போதுமான பிணைப்பொறுப்புகளில் முதலீடு செய்தல் அல்லது கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்குத் தகுந்தவையான அல்லது அவசியமானவையான அசையும் அல்லது அசையா ஆதனத்தைக் கொள்வனவு செய்வதில் அல்லது கையேற்பதில் முதலீடு செய்தல் ;

(ஈ) கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமான அல்லது அதன் வசம் வைத்திருக்கப்படும் ஏதேனும் காணியில் எவையேனும் கட்டிடத்தை அல்லது கட்டமைப்பைக் கட்டுதல் அல்லது கட்டுவித்தல்.

கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.

5. (1) கூட்டுத்தாபனத்தின் அலுவல்கள், கூட்டுத்தாபனத்தின் அப்போதைக்கு வலுவிலுள்ள விதிகளுக்கமைய கூட்டுத்தாபனத்தின் தலைவர், பொதுச்செயலாளர், பரிபாலனச் செயலாளர், பொருளாளர் மற்றும் கூட்டுத்தாபனத்தின் அத்தகைய விதிகளுக்கிணங்க தெரிவுசெய்யப்படவேண்டிய வேறு மூன்று உறுப்பினர்களையும் கொண்ட முகாமைக் குழுவொன்றின் மூலம் நிருவகிக்கப்படல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் முதலாவது முகாமைக்குழுவானது இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு முந்திய நாளன்று பதவி வகித்ததும் இச்சட்டத்துக்கான அட்டவணையில் பெயர்கள் தரப்பட்டுள்ளதுமான முகாமைக்குழுவின் உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் விதிகள்.

6. (1) உறுப்பினர்களின் ஏதேனும் பொதுக்கூட்டத்தில் சமுகமளித்து வாக்களிக்கும் உறுப்பினர்களின் மூன்றிலிரண்டு பெரும்பான்மை வாக்குமூலம் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களைச் சேர்ப்பதற்கு அல்லது அவர்களை வெளியேற்றுவதற்கு, முகாமைக்குழுவின் அத்துடன் பல்வேறு அலுவலர்களின் முகவர்களின் மற்றும் சேவையாளர்களின் கடமைகளைப் புரிவதற்கு, முகாமைக்குழுவின் கூட்டங்களில் அலுவலர்களின், முகவர்களின் மற்றும் சேவையாளர்களின் கடமைகளைப் புரிவதற்கு முகாமைக்குழுவின் கூட்டங்களில் அலுவல்கள் கையாளப்படுவதில் பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கை முறைக்கு அத்துடன் கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்வதற்கு அத்துடன் அதன் குறிக்கோள்களை எய்துவதற்குப் பொதுவாக வேறுவகையில் இச்சட்டத்தின் அல்லது எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளோடு ஒவ்வாதனவாக இல்லாதனவான விதிகளைக், காலத்துக்குக்காலம் ஆக்குவது, கூட்டுத்தாபனத்துக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும். அத்தகைய விதிகள் அதே போன்ற கூட்டமொன்றில் அதேபோன்ற முறையில், அவை மாற்றப்படலாம் அல்லது அவற்றிற்கு எதுவும் சேர்க்கப் படலாம் அல்லது திருத்தப்படலாம் அல்லது நீக்கப்படலாம் :–

(2) இச்சட்டம் நடைமுறைக்கு வரும் திகதிக்கு முற்போந்த நாளன்று வலுவிலுள்ளனவாயிருந்துவரும் இந்நிலையத்தின் விதிகள் இச்சட்டத்தின் அல்லது வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு முரணாகவிராத அளவுக்கு இப்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கூட்டுத்தாபனத்தின் விதிகளாகக் கருதப்படல் வேண்டும்.

(3) கூட்டுத்தாபனத்தின் எல்லா உறுப்பினர்களும் அப்போதைக்கு வலுவிலுள்ளனவான கூட்டுத்தாபன விதிகளுக்கு அமைந்தோராதல் வேண்டும்.

**7.** இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று இருக்கின்றதான நிலையத்தின் எல்லாத் தனிசுகளும், பொறுப்புக்களும் இத்தால் உருவாக்கப்பட்ட கூட்டுத்தாபனத்தால் செலுத்தப்படுதல் வேண்டும் என்பதுடன், அந்நாளன்று நிலையத்திற்கு வருமதியான எல்லாத் தனிசுகளும் நிலையத்திற்குச் செலுத்தப்படற்பாலனவான ஒப்பப்பணங்களும், உதவுதொகைகளும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகக் கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்தப்படுதலும் வேண்டும். *நிலையத்தினால் செலுத்தப்படற்பாலனவும் நிலையத்திற்குச் செலுத்தப்படற்பாலனவுமான கடன்கள்.*

**8.** கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது, கூட்டுத்தாபனத்தின் தலைவர், பொதுச் செயலாளர் அல்லது பரிபாலனச் செயலாளரின் முன்னிலையிலன்றி, எத்தன்மைத்தான எச்சாதனத்திலும் இடப்படலாகாது. அத்துடன் அத்தகைய தலைவர், பொதுச்செயலாளர் அல்லது பரிபாலனச் செயலாளர் ஆகியவர்கள் தாம் சமுகமளித்தமைக்கு அடையாளமாக அச்சாதனத்தில் தமது பெயர்களை எழுதிக் கையொப்பமிடுதல் வேண்டும். அவ்வாறு கையொப்பமிடுதல் எவரேனும் ஆள் சாட்சிக்காரராகக் கையொப்பமிடுவதினின்றும் தனிவேறானதாதல் வேண்டும். *கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.*

**9.** கூட்டுத்தாபனமானது அப்போதைக்கு வலுவிலுள்ள கூட்டுத்தாபன விதிகளுக்கமைய, ஏதேனும் கொள்வனவு, அளிப்பு, நன்கொடை, இறுதிவிருப்பாவணக் கையளிப்பு அல்லது வேறு வகையாக அதற்கு உரித்தாக்கப்படக்கூடிய அசைவுள்ள அல்லது அசைவற்ற ஏதேனும் ஆதனத்தை கொள்வதற்கும், வைத்திருக்கவும், இயலுமானதாகவும், ஆற்றலுடையதாகவும் இருத்தல் வேண்டும். அத்துடன் அத்தகைய எல்லா ஆதனங்களும் அவற்றை ஈடுவைக்க, விற்க, குத்தகைக்குக் கொடுக்க, கொடுத்துமாற்ற அல்லது வேறுவகையில் கையுதிர்க்கவுமான முழுத்தத்துவத்துடன் கூட்டுத்தாபனத்தின் அப்போதைக்கு வலுவிலுள்ள விதிகளுக்கமைய இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகக் கூட்டுத்தாபனத்தினால் வைத்திருக்கப்படுதல் வேண்டும். *கூட்டுத்தாபனத்தின் அசைவுள்ள, அசைவற்ற ஆதனங்களை வைத்திருத்தலும் கையாளுதலும்.*

**10.** இச்சட்டத்தில் அடங்கியுள்ளது எதுவும், இலங்கைக் குடியரசின் உரிமைகளையேனும், ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவினது உரிமைகளையேனும், இச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டவர்களும், அவர்கள் மூலம், அவர்களிலிருந்து அல்லது அவர்களின்கீழ் உரிமைகோருபவர்களும் தவிர்ந்த வேறு எவரேனும் ஆட்களினது உரிமைகளையேனும், பங்கப்படுத்துவதாதலோ, பாதிக்கப்படுவதாதலோ ஆகாது. *குடியரசினதும் ஏனையோர்களினதும் உரிமைகளைப் பேணுதல்.*

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**11.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையில் ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

## அட்டவணை

(பிரிவு 5 (2))

முகாமைக்குழு

| | |
|---|---|
| தலைவர் | - மௌலவி ஏ. எம். அலியார், பீ. ஏ |
| பொதுச்செயலாளர் | - அஷ்ஷெய்க் எஸ். எஸ். ஸெய்யித் அலவி, பீ. ஏ |
| பரிபாலனச் செயலாளர் | - திரு. எஸ். எஸ். எம். அன்ஸார், பீ. ஏ |
| பொருளாளர் | - மௌலவி ஹாபில் எம். ஏ. காலித்தீன் |
| உறுப்பினர் | - மௌலவி இஸட். ஏ. ஹக்கீமுல் அமீன் |
| உறுப்பினர் | - மௌலவி எம். ஐ. எம். இர்ஷாத் |
| உறுப்பினர் | - மௌலவி எம். எம். குதுபுர் ரஹீம் |

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387: (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல.32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ்ரோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.